# செய்தி வெளியீடு

**செய்தி வெளியீடு எண்.33/2024 நாள் : 15.03.2024**

**ரூ.51.16 கோடி மதிப்பீட்டில் திரு.வி.க நகர் மண்டலம், கொளத்தூர் பகுதியில் வார்டு - 64, சிவானந்தா நகர், வார்டு - 65 & 68, பெரியார் நகரில் கழிவுநீரிறைக்கும் நிலையம் மற்றும் கழிவுநீர் கட்டமைப்பு குழாய்களை மாற்றி அமைக்கும் பணிகள்**

**ரூ.18.00 கோடி மதிப்பீட்டில் தண்டையார்பேட்டை மண்டலம், வார்டு - 47, கொருக்குப்பேட்டையில் உள்ள பாரதி நகர் பகுதியில் நீர்த்தேக்கத் தொட்டி மற்றும் விடுபட்ட தெருக்களில் குடிநீர் பிரதான குழாய்கள் பதிக்கும் பணிகள்**

**ரூ.1.59 கோடி மதிப்பீட்டில் மணலி மண்டலம், வார்டு - 15, மணலி புதுநகர் தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரிய குடியிருப்புகளுக்கு குடிநீர் பிரதான குழாய்கள் பதிக்கும் பணிகள் தொடங்கப்பட்டுள்ளது.**

**<u>சென்னை குடிநீர் வாரியம் தகவல்</u>**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் சென்னை குடிநீர் வாரியத்தின் சார்பில் ரூ.51.16 கோடி மதிப்பீட்டில் திரு.வி.க நகர் மண்டலம், கொளத்தூர் தொகுதியில் வார்டு-64, சிவானந்தா நகர், வார்டு-65 & 68, பெரியார் நகரில் கழிவுநீரிறைக்கும் நிலையம் மற்றும் கழிவுநீர் கட்டமைப்பு குழாய்களை மாற்றி அமைக்கும் பணிகள், தண்டையார்பேட்டை மண்டலம், வார்டு - 47, கொருக்குப்பேட்டையில் உள்ள பாரதி நகர் பகுதியில் நீர்த்தேக்கத் தொட்டி மற்றும் விடுபட்ட தெருக்களில் குடிநீர் பிரதான குழாய்கள் பதிக்கும் பணிகள் மற்றும் மணலி மண்டலம், வார்டு-15, மணலி புதுநகர் தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரிய குடியிருப்புகளுக்கு குடிநீர் பிரதான குழாய்கள் பதிக்கும் பணிகள் அடிக்கல் நாட்டப்பட்டு தொடங்கி வைக்கப்பட்டது.

அதனடிப்படையில், கொளத்தூர் பகுதியில் உள்ள சிவானந்தா நகர் பகுதிகளில் 2.5 கி.மீ நீளத்திற்கு 250 மி.மீ விட்டமுடைய கழிவுநீர் குழாய்கள் பதிக்கும் பணிகள் மற்றும் பெரியார் நகரில் 16.5 கி.மீ நீளத்திற்கு 250 மி.மீ விட்டமுடைய DWC குழாய், 0.31 கி.மீ நீளத்திற்கு 300 மி.மீ விட்டமுடைய DWC குழாய், 0.61 கி.மீ நீளத்திற்கு 400 மி.மீ விட்டமுடைய CI குழாய்கள் பதிக்கும் பணிகள் தொடங்கப்பட்டுள்ளது. சிவானந்தா நகர் பகுதியில்

98 எண்ணிக்கையிலான புதிய இயந்திர நுழைவாயில்கள் அமைக்கப்படும். இத்திட்டத்தின் மூலம், 650 குடியிருப்புகளில் உள்ள 5,000 பொதுமக்கள் பயனடைவர். மேலும், பெரியார் நகரில் 130 தெருக்களில், 636 எண்ணிக்கையிலான புதிய இயந்திர நுழைவாயில்கள் அமைக்கப்பட்டு 14,320 குடியிருப்புகளில் உள்ள 57 ஆயிரத்து 281 பொதுமக்கள் பயனடைவர்.

தண்டையார்பேட்டை மண்டலம், வார்டு-47, கொருக்குப்பேட்டையில் உள்ள பாரதி நகர் பகுதியில் 2.4 கி.மீ நீளத்திற்கு 150, 200, 300, 450 மி.மீ விட்டமுடைய குடிநீர் பிரதான குழாய்கள் மற்றும் 600 மி.மீ விட்டமுடைய குடிநீர் பரிமாற்ற குழாய்கள் பதிக்கும் பணிகள் தொடங்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின்கீழ், 3 மில்லியன் லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி, 10 மில்லியன் லிட்டர் கொள்ளளவு கொண்ட கீழ்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்கப்படும். நாளொன்றுக்கு 13 மில்லியன் லிட்டர் குடிநீர் மேற்கண்ட பகுதிகளுக்கு வழங்கப்படுவதன் மூலம் 1 இலட்சத்து 28 ஆயிரத்து 256 பொதுமக்கள் பயனடைவர்.

மணலி மண்டலம், வார்டு-15, மணலி புதுநகர் தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரிய குடியிருப்புகளுக்கு 1.5 கி.மீ நீளத்திற்கு 100 மி.மீ விட்டமுடைய அர்ப்பணிக்கப்பட்ட குடிநீர் குழாயினை 600 மி.மீ விட்டமுடைய குடிநீர் பிரதான குழாயுடன் இணைக்கும் பணிகள் தொடங்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் மூலம், 6,930 பொதுமக்கள் பயனடைவர்.

வெளியீடு : இணை இயக்குநர் / மக்கள் தொடர்பு மேலாளர்,
சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும்
கழிவு நீரகற்று வாரியம்

சென்னை குடிநீர் வாரியத்தின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள
CHN_Metro_Water CMWSSB chennaimetrowater